TNTS090040692022

மாண்பமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சங்கரன்கோவில்.

**முன்னிலை : திரு.M. மாரி, M.S.W., L.L.B.,**

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

சங்கரன்கோவில்.

2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 15– ஆம் நாள் திங்கள் கிழமை

**C.C.No.760/2022**

அரசுக்காக: உதவி காவல் ஆய்வாளர்,
கரிவலம்வந்தநல்லூர் காவல் நிலையம்
(கரிவலம்வந்தநல்லூர் காவல் நிலைய குற்ற எண்.229/2021)

……… குற்றமுறையீட்டாளர்

/எதிர்/

1. கருப்பையா, வயது, 63/2021,
த/பெ பெருமாள்,
எண்.137, மேற்குத்தெரு, குவளைக்கண்ணி.
2. சண்முகநாதன், வயது, 32/2021,
த/பெ. கருப்பையா,
எண். 137/1, மேற்குத்தெரு, குவளைக்கண்ணி.
3. பழனிவேல் (எ) சதீஸ், வயது, 29/2021,
த/பெ. ராமகிருஷ்ணன்,
எண். 1/97A, மேற்குத்தெரு, குவளைக்கண்ணி.

……. எதிரிகள்

| | | |
|---|---|---|
| **1.** | Case Number | CC No. 760/2022 |
| **2.** | Name of the Police Station and Crime Number | Karivalamvanthanallur Police Station<br>Crime No.229/2021 |
| **3.** | Name of the Accused | 1. Karuppaiah<br>2. Shanmuganathan<br>3. Palanivel @ Sathish |
| **4.** | Date of Occurrence | 24.06.2021 |
| **5.** | Date of surrender | -- |
| **6.** | Date of Arrest | A1 to A3 - 03.07.2021 |
| **7.** | Period of remand | -- |

| | | |
|---|---|---|
| **8.** | Date of release on bail | A1 to A3 - 03.07.2021 (Station bail) |
| **9.** | Date of filing final report | 25.08.2022 |
| **10.** | Date of Commencement of trial | 13.05.2026 |
| **11.** | Date of Chief examination | PW1 13.05.2026<br>PW2 13.05.2026<br>PW3 04.06.2026 |
| **12.** | Date of Cross examination | PW1 13.05.2026<br>PW2 13.05.2026<br>PW3 04.06.2026 |
| **13.** | Date of Conclusion of trial | 12.06. 2026 |
| **14.** | Plea of the accused | Not guilty |
| **15.** | Finding of the Court | The accused 1 and 3 are found not guilty for the offences u/s.294(b), 323, 352, 506(1) (2counts) of IPC and Section 4 of TNHW Act and the 2nd accused is found not guilty for the offences u/s.294(b), 323, 352, 355, 506(1) (2 counts) of IPC and Section 4 of TNHW Act and therefore the accused is acquitted under Section 248(1) Cr.P.C. |

கடந்த 26.08.2022 தேதியன்று இந்நீதிமன்றத்தின் ஆண்டுப்பட்டிகை எண். 760/2022 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு, அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி பொது வழக்கறிஞர் நிலை –1 அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.கிருஷ்ணமூர்த்தி, B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும் இவ்வழக்கானது 15.06.2026 அன்று என் முன்னர் இறுதி விசாரணைக்கு வரப்பெற்று ஆவணங்களை பரிசீலனை செய்து, இந்நீதிமன்றம் வழங்கும் ...

**<u>தீ ர் ப் பு ரை</u>**

இவ்வழக்கானது கரிவலம்வந்தநல்லூர் காவல் நிலையத்தார் 1, 3–வது எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 352, 506(1) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழும், 2–வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b),

323, 352, 355, 506(1) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழும் குற்ற எண். 229/2021—ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள கு.வி.மு.ச. பிரிவு 173(2)—ன் கீழ் இறுதி அறிக்கையை நீதிமன்றம் கவனமுடன் பரிசீலனை செய்து போதுமான காரணம் எதிரிகள் மீது குற்றம் விசாரிக்கத்தக்க முகாந்திரம் உள்ளது என இந்நீதிமன்றம் திருப்தி அடைந்து பின் கு.வி.மு.ச. பிரிவு 190 (1) (b)—ன் கீழ் இவ்வழக்கு நீதிமன்றம் தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டது.

**1. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :**

1.1 இவ்வழக்கின் புகார்தாரருக்கு சொந்தமான இடத்தில் பக்கத்து வீட்டைச் சேர்ந்த 1—வது எதிரி பாத்ரூம் கட்டியதால் புகார்தாரரின் குடும்பத்திற்கும், 1—வது எதிரியின் குடும்பத்திற்கும் முன்விரோதம் இருந்து வந்துள்ள நிலையில், கடந்த 24.06.2021—ம் தேதி இரவு 19.00 (07.00) மணியளவில் புகார்தாரர் அவரது மகளான சாட்சி—2 திரிஷா என்பவர் வீட்டின் முன்பு நின்று கொண்டிருந்தபோது அங்கு வந்த 1—வது எதிரியைப் பார்த்து எதுக்கு என் இடத்தில் இருக்க பாத்ரூமை எடுக்காமல் என்னிடம் பிரச்சனை செய்றீங்க என்று கேட்க அதற்கு, 1 முதல் 3 எதிரிகள் சேர்ந்து புகார்தாரரை பெண் என்றும் பாராமல் பொது இடத்தில் வைத்து "ஏ தேவிடியா கூதி மகள்களா நீ ஐம்பதாயிரம் கொடு பாத்ரூம் எடுக்கிறோம், இல்லைனா எடுக்க முடியாது என்று அசிங்கமாக பேசி 1—வது எதிரி புகார்தாரரின் கையை பிடித்து நிறுத்தியும், 2, 3 எதிரிகள் சேர்ந்து புகார்தாரரை கீழே தள்ளி இடது முழங்கையில் ஊமைக்காயம் ஏற்படுத்தியும், சாட்சி—2 திரிஷா எதிரிகள் மூவரையும் பார்த்து எதுக்கு இப்படி என் அம்மாவை அடிக்கிறீங்க என்று கேட்டதற்கு 2—வது எதிரி அவரது செருப்பைக் கழட்டி திரிஷாவை வலது பக்க நெற்றி மற்றும் தலையின் வலதுபுறம் அடித்து சாதாரண காயம் ஏற்படுத்தியும், எதிரிகள் மூவரும் சேர்ந்து புகார்தாரர் மற்றும் சாட்சி—2 ஆகியோர்களைப் பார்த்து "சிறுக்கிபுள்ளைகளா இனியும் பாத்ரூமை எடுக்க சொன்னீங்கன்னா உங்களை கொன்னுபுடுவோம்" என்று குற்றமுறு கொலை மிரட்டல் விடுத்ததாகவும் தெரிவிக்கப்பட்டு, 1, 3—வது எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 352, 506(1) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழும், 2—வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 352, 355, 506(1) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழும் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு

கரிவலம்வந்தநல்லூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்களால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>எதிரிகளுக்கு வழக்கு ஆவணங்கள் வழங்கி, குற்றம் குறித்து வினவிய விபரம் ;–</u>

2.1 இவ்வழக்கின் எதிரிக்கு கு.வி.மு.ச.பிரிவு 204–ன்படி அழைப்பணை அனுப்பி எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் அரசு தரப்பு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச.பிரிவு 207–ன் கீழ் எதிரிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டு, போதிய கால அவகாசம் அளித்து, இரு தரப்பும் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலனை செய்தவகையில் கு.வி.மு.ச. பிரிவு 240(1)–ன் கீழ் எதிரிகள் மீது கீழ்க்கண்டவாறு குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டன.

1) இவ்வழக்கின் புகார்தாரருக்கு சொந்தமான இடத்தில் பக்கத்து வீட்டைச் சேர்ந்த 1–வது எதிரி பாத்ரூம் கட்டியதால் சாட்சி–1ன் குடும்பத்திற்கும், 1–வது எதிரியின் குடும்பத்திற்கும் முன்விரோதம் இருந்து வந்துள்ள நிலையில், கடந்த 24.06.2021–ம் தேதி இரவு 19.00 மணியளவில் புகார்தாரர் அவரது மகளான சாட்சி–2 திரிஷா என்பவர் வீட்டின் முன்பு நின்று கொண்டிருந்தபோது அங்கு வந்த 1–வது எதிரியைப் பார்த்து எதுக்கு என் இடத்தில் இருக்க பாத்ரூமை எடுக்காமல் என்னிடம் பிரச்சனை செய்றீங்க என்று கேட்க அதற்கு, 1 முதல் 3 எதிரிகள் சேர்ந்து சாட்சி–1ஐ பெண் என்றும் பாராமல் பொது இடத்தில் வைத்து "ஏ தேவிடியா கூதி மகள்களா நீ ஐம்பதாயிரம் கொடு பாத்ரூம் எடுக்கிறோம், இல்லைனா எடுக்க முடியாது என்று அசிங்கமாக பேசிய குற்றத்திற்காக 1 முதல் 3 எதிரிகள் மீது இ.த.ச. பிரிவு 294(பி)–ன் கீழ் தண்டிப்பதற்குரிய குற்றம் புரிந்ததாக குற்றச்சாட்டு வனையப்பட்டன.

2) மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக, 1–வது எதிரி புகார்தாரரின் கையை பிடித்து நிறுத்தியும், 2, 3 எதிரிகள் சேர்ந்து புகார்தாரரை கீழே தள்ளி இடது முழங்கையில் ஊமைக்காயம் ஏற்படுத்திய குற்றத்திற்காக 1 முதல் 3 எதிரிகள் மீது இ.த.ச. பிரிவு 323–ன் கீழ் தண்டிப்பதற்குரிய குற்றம் புரிந்ததாக குற்றச்சாட்டு வனையப்பட்டன.

3) மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக, 1 முதல் 3 எதிரிகள் குற்றமுறு வன்முறையை பயன்படுத்திய குற்றத்திற்காக 1 முதல் 3 எதிரிகள் மீது இ.த.ச. பிரிவு 352–ன் கீழ் தண்டிப்பதற்குரிய குற்றம் புரிந்ததாக குற்றச்சாட்டு வனையப்பட்டன.

4) மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக, சாட்சி–2 திரிஷா எதிரிகள் மூவரையும் பார்த்து எதுக்கு இப்படி என் அம்மாவை அடிக்கிறீங்க என்று கேட்டதற்கு 2–வது எதிரி அவரது செருப்பைக் கழட்டி திரிஷாவை வலது பக்க நெற்றி மற்றும் தலையின் வலதுபுறம் அடித்து சாதாரண காயம் ஏற்படுத்திய குற்றத்திற்காக 2–வது எதிரி மீது இ.த.ச. பிரிவு 355–ன் கீழ் தண்டிப்பதற்குரிய குற்றம் புரிந்ததாக குற்றச்சாட்டு வனையப்பட்டன.

5) மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக, எதிரிகள் மூவரும் சேர்ந்து புகார்தாரர் மற்றும் சாட்சி–2 ஆகியோர்களைப் பார்த்து "சிறுக்கிபுள்ளைகளா இனியும் பாத்ரூமை எடுக்க சொன்னீங்கன்னா உங்களை கொன்னுபுடுவோம்" என்று குற்றமுறு கொலை மிரட்டல் குற்றத்திற்காக எதிரி மீது இ.த.ச. பிரிவு 506(1)(2 எண்ணிக்கைகள்)–ன் கீழ் தண்டிப்பதற்குரிய குற்றம் புரிந்ததாக குற்றச்சாட்டு வனையப்பட்டன

6) மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக, எதிரி 1–வது சாட்சி கவிதா என்பவரை பெண் என்றும் பாராமல் பொது இடத்தில் வைத்து அசிங்கமாக பேசி, அடித்து காயப்படுத்தி, கொலை மிரட்டல் விடுத்து, அவரது பெண்மைக்கு பங்கம் விளைவித்த குற்றத்திற்காக 1 முதல் 3 எதிரிகள் மீது பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் தண்டிப்பதற்குரிய குற்றம் புரிந்ததாக குற்றச்சாட்டு வனையப்பட்டன.

3. மேற்படி வனையப்பட்ட குற்றச்சாட்டுக்களை எதிரிகளுக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, விளக்கப்பட்டு குற்றத்தை ஒத்துக்கொள்கிறீர்களா ? அல்லது விசாரணையை வேண்டுகிறீர்களா? என்று வினவப்பட்டது. அப்போது எதிரிகள் குற்றச்சாட்டுக்களை மறுத்தார்.

4. இதற்குப்பின் அரசு தரப்பில் சாட்சிகளை ஆஜர்படுத்த உத்தரவிடப்பட்டது. அதனடிப்படையில், அரசு தரப்பில் மொத்தம் அ.சா.1 முதல் அ.சா.3 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன.

5. அரசு தரப்பு சாட்சிகள் விசாரிக்கப்பட்டபின், அவர்களது சாட்சியத்தில் எதிரிகளுக்கு எதிரான சங்கதிகள் பற்றி நேரடியாக விளக்கம் பெறுவதற்காக கு.வி.மு.ச. பிரிவு 313(1)(b)–ன் கீழ் கேள்விகள் கேட்டபோது எதிரிகள் பொய் என்று மறுத்தார்கள்.

## 6. <u>தீர்மானிக்கப்பட வேண்டி பிரச்சனைகள் :–</u>

1) எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபித்துள்ளனரா?

2) எதிரிகள் குற்றவாளிகள் எனில், எதிரிக்கு வழங்கப்பட வேண்டிய தண்டனை என்ன?

**7. <u>நிரூபண சுமை :–</u>**

இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 101–ன் படி(BSA– 104) அரசு தரப்பில்தான் எதிரிகள் குற்றத்தை செய்தார்கள் என்பதை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்க வேண்டிய சுமையானது (Burden of proof) அரசு தரப்பை சார்ந்ததாகும்.

8. <u>அரசு தரப்பு சாட்சியங்களும், பரிசீலனையும் :–</u>

8.1 இந்த வழக்கில் 1 முதல் 3 எதிரிகள் மீது இது முதலாவது குற்றச்சாட்டு என்பதும், இவ்வழக்கின் புகார்தாரருக்கு சொந்தமான இடத்தில் பக்கத்து வீட்டைச் சேர்ந்த 1–வது எதிரி பாத்ரூம் கட்டியதால் சாட்சி–1 ன் குடும்பத்திற்கும், 1–வது எதிரியின் குடும்பத்திற்கும் முன்விரோதம் இருந்து வந்துள்ள நிலையில், கடந்த 24.06.2021–ம் தேதி இரவு 19.00 மணியளவில் புகார்தாரர் அவரது மகளான சாட்சி–2 திரிஷா என்பவர் வீட்டின் முன்பு நின்று கொண்டிருந்தபோது அங்கு வந்த 1–வது எதிரியைப் பார்த்து எதுக்கு என் இடத்தில் இருக்க பாத்ரூமை எடுக்காமல் என்னிடம் பிரச்சனை செய்றீங்க என்று கேட்க அதற்கு, 1 முதல் 3 எதிரிகள் சேர்ந்து சாட்சி–1 ஐ பெண் என்றும் பாராமல் பொது இடத்தில் வைத்து "ஏ தேவிடியா கூதி மகள்களா நீ ஐம்பதாயிரம் கொடு பாத்ரூம் எடுக்கிறோம், இல்லைனா எடுக்க முடியாது என்று அசிங்கமாக ஏசிய குற்றத்திற்காக 1 முதல் 3 எதிரிகள் மீது இ.த.ச. பிரிவு 294(பி)–ன் கீழ் தண்டிப்பதற்குரிய குற்றம் புரிந்தாரா? என்பதை அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து பின்வருமாறு பரிசீலனை செய்யலாம்.

8.2 மேற்படி முதல் குற்றச்சாட்டை இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 294 உட்கூறுகள் அரசு தரப்பால் சந்தேகத்திற்கு அப்பால் நிரூபணம் செய்ய வேண்டும். அதன் ஊட்கூறுகள் பின்வருமாறு:–

<u>பிரிவு 294:– ஆபாசச் செயல்களும் பாடல்களும் :– மற்றவர்களுக்குத் தொந்தரவாக இருக்கும்படி</u> –

அ) பொதுவிடம் எதிலும் ஆபாசச் செயல் எதையும் செய்கிற, அல்லது

ஆ) பொதுவிடம் எதிலும் அல்லது அதற்கு அருகில், ஆபாசப் பாடல்கள், கதைப்பாடல் அல்லது சொற்கள் எதையும் பாடுகிற, ஒப்பிக்கிற, அல்லது மொழிகிற எவரும் – மூன்று மாதங்கள் வரை சிறைத்தண்டனையோ, அல்லது ஓராயிரம் ரூபாய் வரை அபராதமோ, அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

8.3 சம்பவ இடமானது பிள்ளையார்கோவில் தெரு, குவளைக்கண்ணியில் உள்ள புகார்தாரரின் வீட்டின் முன்பு உள்ள இடம் ஆகும். இதனை அ.சா.1 சாட்சி மூலம் அறியலாம். மேற்படி பிரிவு 294(b) உட்கூறுகள் பொருந்தவேண்டும் எனில், சம்பவ இடமானது பொது இடமோ அல்லது பொது இடம் அருகில் ஏற்பட்டிருக்க வேண்டும் என கூறப்பட்டதிலிருந்தே இந்த அரசு தரப்பு வழக்கில் அதுபோன்று அ.சா.1 சாட்சி சம்பவ இடம் பொது இடம் என்றோ, பொது இடம் அருகில் என்றோ குறிப்பிட்டு சாட்சியமளிக்கவில்லை. குறிப்பாக, அ.சா.1 தனது நீதிமன்ற முதல் விசாரணை சாட்சியத்தில், "ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், தன்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் மட்டும் தன்னுடையதுதான் என்றும், அது அ.சா.ஆ–1 என்றும், புகாரில் என்ன எழுதியுள்ளது என்ற விபரம் தனக்குத் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும்" சாட்சியம் அளித்துள்ளார். அதேபோன்று, சம்பவ சாட்சியான அ.சா.2 தனது நீதிமன்ற முதல் விசாரணை சாட்சியத்தில், "ஆஜர் எதிரிகளை தனக்குத் தெரியும் என்றும், வழக்குபற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும்" சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சம்பவத்தால் பாதிக்கப்பட்ட அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்களின் சாட்சியங்களிலிருந்து 1 முதல் 3 எதிரிகள்தான் அ.சா.1, அ.சா.2 ஐ பொது இடத்தில் வைத்து அசிங்கமான வார்த்தைகளால் பேசியதாகவும், அதனால், அ.சா.1, அ.சா.2 க்கு தொந்தரவு ஏற்பட்டது என்றும் குறிப்பிட்டு சாட்சியமளிக்கவில்லை. மாறாக அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்து பிறழ் சாட்சிகளாக மாறியுள்ளார்கள். இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 294(b)–ன் கீழான குற்றச்சாட்டில் எதிரி தண்டிக்கப்பட வேண்டுமெனில், பாதிக்கப்பட்ட நபரை பொது மக்கள் மத்தியிலோ, பொது இடத்திலோ, பொது இடம் அருகிலோ பாதிக்கப்பட்டவரை அவமானப்படுத்த

வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் ஆபாசமான அருவருக்கத்தக்க மொழி பேசியதால் பாதிக்கப்பட்டவருக்கு தொல்லை ஏற்படுத்தியதாக இருக்க வேண்டும். அப்படி எதுவும் இந்த வழக்கில் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பால் எதிரிகளுக்கு எதிராக நிரூபணம் செய்யவில்லை என்பதை பரிசீலனை செய்து, **1) கே.ஜெயராம் மஞ்சு எதிர் ஜானகிராஜ் 1990 மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பின்படியும், 2) பவன்குமார் எதிர் ஹரியானா (1996) 4 SCC 17 என்ற மாண்பமை உச்சநீதிமன்ற தீர்ப்பில்**

" 294(b)பொருந்துவதற்கு மூன்று கடுமையான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என தெளிவுபடுத்தியுள்ளனர். அவை பின்வருமாறு

(i) அந்த செயல் ஒரு பொது இடத்திலோ அல்லது அதன் அருகிலோ செய்யப்பட வேண்டும். அதாவது ஆபாசமான வார்த்தைகள் உச்சரிக்கப்பட வேண்டும்.

(ii) அந்த வார்த்தைகளோ அல்லது செயலோ உண்மையில் ஆபாசமானதாக இருக்க வேண்டும்.

(iii) அந்த ஆபாச வார்த்தை கேட்டதால் மற்றவர்களுக்கு தொந்தரவு ஏற்பட்டிருக்க வேண்டும்.

என்றும் கூறப்பட்டுள்ளது. மேற்படி அ.சா.1, அ.சா.2 வரையிலான சாட்சியத்தின் மூலம் 1 முதல் 3 எதிரிகள் மீதான இ.த.ச. பிரிவு 294(b) –ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பினரால் மேற்படி 294(b) உட்கூறுகளையும், மாண்பமை உச்ச நீதிமன்றம், உயர்நீதிமன்றம் முன்தீர்ப்புகளில் கூறப்பட்டுள்ளதையும் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதி, 1 முதல் 3 எதிரிகளை இ.த.ச. பிரிவு 294(b) குற்றச்சாட்டு மெய்ப்பிக்கப்படாததால் எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

9. இந்த வழக்கில், 1 முதல் 3 எதிரிகள் மீது இரண்டாவது குற்றச்சாட்டு என்பது 1–வது எதிரி புகார்தாரரின் கையை பிடித்து நிறுத்தியும், 2, 3 எதிரிகள் சேர்ந்து புகார்தாரரை கீழே தள்ளி இடது முழங்கையில் ஊமைக்காயம் ஏற்படுத்திய குற்றத்திற்காக எதிரிகள் மீது இ.த.ச. பிரிவு 323–ன் கீழ் தண்டிப்பதற்குரிய குற்றம் புரிந்தாரா? என்பதை அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து பின்வருமாறு பரிசீலனை செய்யலாம்.

9.1. மேற்படி இரண்டாவது குற்றச்சாட்டை இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 319, 321, 323 உட்கூறுகள் அரசு தரப்பால் சந்தேகத்திற்கு அப்பால் நிரூபணம் செய்ய வேண்டும். அதன் ஊட்கூறுகள் பின்வருமாறு:–

9.2 **<u>இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 319–</u>** காயம் – ஒருவருக்கு உடல்வலி, நோய் அல்லது பலவீனம் விளைவிக்கிற எவரும் காயம் விளைவிக்கிறார் என்று சொல்லப்படுகிறார்.

9.3 **<u>இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 321</u>**– தம்மிச்சையாகக் காயம் விளைவித்தல் – செய்கை ஒன்றின் மூலம் காயம் விளைவிப்பவர் காயம் விளைவிப்பதாகச் சொல்லப்படுவார்.

9.4 **<u>இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 323</u>** – காயம் விளைவிப்பதற்கான தண்டனை இந்தப் பிரிவின் கீழ் காயம் விளைவிக்கும் ஒருவர் ஓர் ஆண்டு சிறைத்தண்டனையோ, அல்லது ஆயிரம் ரூபாய் வரை அபராதமோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

9.5 இரண்டாவது குற்றச்சாட்டை பொறுத்து அ.சா.1 சாட்சி 161 வாக்குமூலத்தில், 1–வது எதிரி சாட்சி–1ன் கையைபிடித்து திருக்கியும், 2, 3 எதிரிகள் சேர்ந்து கீழே தள்ளிவிட்டதில் தனக்கு இடது முழங்கையில் ஊமைக்காயம் ஏற்பட்டது எனக் கூறியுள்ளார். ஆனால், அதன் தொடர்ச்சியாக நீதிமன்ற முதல் விசாரணையில் "ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், தன்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் மட்டும் தன்னுடையதுதான் என்றும், அது அ.சா.ஆ–1 என்றும், புகாரில் என்ன எழுதியுள்ளது என்ற விபரம் தனக்குத் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும்" சாட்சியம் அளித்துள்ளார். அதேபோன்று, சம்பவ சாட்சியான அ.சா.2 தனது நீதிமன்ற முதல் விசாரணை சாட்சியத்தில், "ஆஜர் எதிரிகளை தனக்குத் தெரியும் என்றும், வழக்குபற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும்" சாட்சியம் அளித்துள்ளார்கள். அவர்களை குறுக்கு விசாரணை செய்தபோதும் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியமளிக்கவில்லை. மேற்படி இந்திய சாட்சிய சட்டத்தின் படியும், மாண்புமிகு உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற முன் தீர்ப்புகளின் அடிப்படையில்

சாட்சியம் என்பது முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை இணைந்தது தான் சாட்சியம் என்ற சட்ட கோட்பாட்டின் அடிப்படையில் அ.சா.1, அ.சா.2–ன் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை சாட்சியத்தை இந்நீதிமன்றம் பரிசீலனை எடுத்துக்கொண்டு அ.சா.1, அ.சா.2–ன் சாட்சியம் நம்பும்படியும், சாட்சியத்திற்கு ஒத்துரைக்கும் விதமாக இல்லை (Collaboration) என இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

9.6 அதேபோன்று, அரசு தரப்பு வழக்கின் 1–வது எதிரி அ.சா.1ன் கையைப் பிடித்து திருக்கியும், 2, 3 எதிரிகள் கீழே தள்ளிவிட்டு அவரது இடது முழங்கையில் ஊமைக்காயத்தை ஏற்படுத்தினார்கள் என்பதை மருத்துவர் அளித்த காயச்சான்றின் மூலம் தெரிய வருகிறது. ஆனால், மருத்துவர் சாட்சியம் மற்ற அரசு தரப்பு சாட்சிகளோடு ஒத்துரைக்கவில்லை (Colloboration).

9.7. எனவே, இந்த அரசு தரப்பு வழக்கை சந்தேகிக்கும் வகையில் உள்ளது. ஆதலால் 1–வது எதிரி அ.சா.1 கவிதா என்பவரின் கையைப் பிடித்து திருக்கியும், 2, 3 எதிரிகள் கீழே தள்ளிவிட்டு அவரது இடது முழங்கையில் ஊமைக்காயத்தை ஏற்படுத்தினார்கள் என்பதை அரசு தரப்பு மேற்படி அ.சா.1, அ.சா.2–ன் சாட்சியத்தின் மூலம் 1 முதல் 3 எதிரிகள் மீதான இ.த.ச. பிரிவு 323–ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பினரால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதி, 1 முதல் 3 எதிரிகளை இ.த.ச. பிரிவு 323–ன் கீழான குற்றச்சாட்டு மெய்ப்பிக்கப்படாததால் 1 முதல் 3 எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

10. இந்த வழக்கில், 1 முதல் 3 எதிரிகள் மீது மூன்றாவது குற்றச்சாட்டு என்பது 1 முதல் 3 எதிரிகள் குற்றமுறு வன்முறையை பயன்படுத்திய குற்றத்திற்காக 1 முதல் 3 எதிரிகள் மீது இ.த.ச. பிரிவு 352–ன் கீழ் தண்டிப்பதற்குரிய குற்றம் புரிந்தாரா? என்பதை அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து பின்வருமாறு பரிசீலனை செய்யலாம்.

10.1 மேற்படி மூன்றாவது குற்றச்சாட்டை இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 350, 351, 352 உட்கூறுகள் அரசு தரப்பால் சந்தேகத்திற்கு அப்பால் நிரூபணம் செய்ய வேண்டும். அதன் ஊட்கூறுகள் பின்வருமாறு:–

<u>**பிரிவு 350 :– குற்றமுறு வன்முறை (Criminal Force)**</u> –

குற்றம் எதையேனும் செய்யும்பொருட்டு அல்லது எவர்மீது வன்முறை பயன்படுத்தப்படுகிறதோ அவருக்கு கேடு அச்சம் அல்லது தொந்தரவை அத்தகைய வன்முறையைப் பயன்படுத்துவதன் மூலம் தாம் விளைவிக்கக்கூடும் என்று அறிந்து, அந்த ஆளின் சம்மதமின்றி வன்முறையை உட்கருத்தோடு பயன்படுத்தும ஒருவர், அந்த மற்றவர் மீது குற்றமுறு வன்முறையைப் பயன்படுத்துகிறதாகச் சொல்லப்படுவார்.

<u>**பிரிவு 351 :– தாக்குதல் (Assault )**</u> –

சைகை எதையும் அல்லது முன்னேற்பாடு எதையும் செய்கிறவர். அருகில் இருக்கிறவர் மீது வன்முறையைப் பயன்படுத்தப்போகிறார் என்றும் அச்சத்தை அவருக்கு விளைவிக்கும் எண்ணத்தில் அத்தகைய சைகை அல்லது முன்னேற்பாடு எதையும் செய்யும்போது அவர், தாக்குகிற குற்றத்தைச் செய்வதாகச் சொல்லப்படுகிறார்.

<u>**விளக்கம் :**</u> சொற்களால் மட்டுமே தாக்குதல் ஏற்படாது. ஆனால், ஒருவருடைய சைகைகள் அல்லது முன்னேற்பாடுகளை தாக்குதலாக ஆக்கும் அளவிற்கு, அவர் பயன்படுத்தும் சொற்களுக்குப் பொருள் கொள்ளலாம்.

<u>**பிரிவு 352 :– கடுமையாக ஆத்திரமூட்டப்பட்டதன் பேரில்லாமல் வேறு வகையில் தாக்குதல் அல்லது குற்றமுறு வன்முறைக்குத் தண்டனை (Punishment for assault or criminal force otherwise thatn on grave provocation)**</u> :– ஒருவரால் கடுமையாகவும் திடீரென்றும் ஆத்திரமூட்டப்பட்டதன் பேரில்லாமல் வேறு வகையில் தாக்குகிற அல்லது வன்முறையைப் பயன்படுத்துகிற ஒருவர், மூன்று மாதம் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்குச் சிறைத் தண்டனையோ அல்லது ஐந்நூறு ரூபாய் வரை அபராதமோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

<u>**விளக்கம் :**</u>

அவ்வாறு ஆத்திமூட்டுதலானது குற்றம் செய்வதற்கு ஒரு சாக்காக, குற்றவாளியால் நாடப்பட்டிருந்தால், அல்லது தம்மிச்சையாகத் தண்டப்பட்டிருந்தால், அல்லது

சட்டத்திற்குக் கீழ்ப்படிந்து அல்லது ஒரு பொது ஊழியரால், அத்தகைய பொது ஊழியரின் சட்டப்படியான அதிகாரங்கள் செலுத்தப்படுகையில் செய்யப்பட்ட எதனாலாவது ஆத்திமூட்டப்பட்டிருந்தால், அல்லது

தற்காப்பு உரிமையைச் சட்டப்படி பயன்படுத்தும் வகையில் செய்யப்பட்ட எதனாலாவது ஆத்திரமூட்டப்பட்டிருந்தால்,

கடுமையாகவும், திடீரெனவும் ஏற்பட்ட ஆத்திரமூட்டப்படுதல் இந்தப் பிரிவின்படியுள்ள குற்றத்திற்கான தண்டனையை மட்டுப்படுத்தாது.

குற்றத்தை மட்டுப்படுத்தப் போதுமான அளவுக்குக் கடுமையானதாகவும், திடீரெனவும் ஆத்திரமூட்டப்படுதல் இருந்ததா என்பது சங்கதி பற்றிய ஒரு பிரச்சனையாகும்.

10.2 மூன்றாவது குற்றச்சாட்டை பொறுத்து அ.சா.1 சாட்சி 161 வாக்குமூலத்தில், 1–வது எதிரி சாட்சி–1ன் கையைபிடித்து திருக்கியும், 2, 3 எதிரிகள் சேர்ந்து கீழே தள்ளிவிட்டதில் தனக்கு இடது முழங்கையில் ஊமைக்காயம் ஏற்பட்டது எனக் கூறியுள்ளார். ஆனால், அதன் தொடர்ச்சியாக நீதிமன்ற முதல் விசாரணையில் "ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், தன்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் மட்டும் தன்னுடையதுதான் என்றும், அது அ.சா.ஆ–1 என்றும், புகாரில் என்ன எழுதியுள்ளது என்ற விபரம் தனக்குத் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும்" சாட்சியம் அளித்துள்ளார். அதேபோன்று, சம்பவ சாட்சியான அ.சா.2 தனது நீதிமன்ற முதல் விசாரணை சாட்சியத்தில், "ஆஜர் எதிரிகளை தனக்குத் தெரியும் என்றும், வழக்குபற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும்" சாட்சியம் அளித்துள்ளார்கள். அவர்களை குறுக்கு விசாரணை செய்தபோதும் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியமளிக்கவில்லை. மேலும், எதிரிகள் அ.சா.1 க்கு குற்றம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு வன்முறையை பயன்படுத்தியதால் அ.சா.1 க்கு எதிரிகளின் செயலால் கேடு, அச்சம், தொந்தரவு ஏற்பட்டதாகவோ அல்லது எதிரிகளின் சைகை, வாய்மொழியாகவோ, உடல ரீதியாகவோ அ.சா.1 க்கு தாக்குதல் ஏற்படுத்தப்பட்டது என்றோ, எதிரிகள் திடீரென ஆத்திரமூட்டலால் அ.சா.1 ஐ

குற்றவன்முறை, தாக்குதல் செய்ததாக 1 முதல் 3 எதிரிகள் நடந்துகொண்டார்கள் என்று அ.சா.1, அ.சா.2 சாட்சிகள் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. அவர்களை குறுக்கு விசாரணை செய்தபோதும் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியமளிக்கவில்லை. மேற்படி இந்திய சாட்சிய சட்டத்தின் படியும், மாண்புமிகு உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற முன் தீர்ப்புகளின் அடிப்படையில் சாட்சியம் என்பது முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை இணைந்தது தான் சாட்சியம் என்ற சட்ட கோட்பாட்டின் அடிப்படையில் அ.சா.1, அ.சா.2–ன் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை சாட்சியத்தை இந்நீதிமன்றம் பரிசீலனை எடுத்துக்கொண்டு அ.சா.1, அ.சா.2–ன் சாட்சியம் நம்பும்படியும், சாட்சியத்திற்கு ஒத்துரைக்கும் விதமாக இல்லை (Collaboration) என இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

11. ஆதலால் 1–வது எதிரி சாட்சி–1ன் கையைபிடித்து திருக்கியும், 2, 3 எதிரிகள் சேர்ந்து கீழே தள்ளிவிட்டதில் தனக்கு இடது முழங்கையில் ஊமைக்காயத்தை ஏற்படுத்தினார்கள் என்பதை அரசு தரப்பு மேற்படி அ.சா.1–ன் சாட்சியத்தின் மூலம் 1 முதல் 3 எதிரிகள் மீதான இ.த.ச. பிரிவு 352–ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பினரால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதி, 1 முதல் 3 எதிரிகளை இ.த.ச. பிரிவு 352 குற்றச்சாட்டு மெய்ப்பிக்கப்படாததால் எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

11.1. இந்த வழக்கில், 2–வது எதிரி மீது நான்காவது குற்றச்சாட்டு என்பது, சாட்சி–2 திரிஷா எதிரிகள் மூவரையும் பார்த்து எதுக்கு இப்படி என் அம்மாவை அடிக்கிறீங்க என்று கேட்டதற்கு 2–வது எதிரி அவரது செருப்பைக் கழட்டி திரிஷாவை வலது பக்க நெற்றி மற்றும் தலையின் வலதுபுறம் அடித்து சாதாரண காயம் ஏற்படுத்திய குற்றத்திற்காக 2–வது எதிரி மீது இ.த.ச. பிரிவு 355–ன் கீழ் தண்டிப்பதற்குரிய குற்றம் புரிந்தாரா? என்பதை அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து பின்வருமாறு பரிசீலனை செய்யலாம்.

11.2. **<u>மேற்படி நான்காவது குற்றச்சாட்டை இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 355 அரசு தரப்பால் சந்தேகத்திற்கு அப்பால் நிரூபணம் செய்ய வேண்டும். அவை பின்வருமாறு:–</u>**

**11.2. <u>இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 355 – கடுமையாக ஆத்திரமூட்டப்படுவதன் பேரிலல்லாமல் வேறுவகையில் அவமானப்படுத்தும் எண்ணத்தில் தாக்குதல் அல்லது வன்முறையை பயன்படுத்துதல் (Assault or criminal force with intent to dishounour person, otherwise than on grave provocation) :</u>**

ஒருவரால் கடுமையாகவும், திடீரென்றும் ஆத்திரமூட்டப்பட்டதன் பேரிலல்லாமல் வேறுவகையில் அவமானப்படுத்தும் எண்ணத்தில் தாக்குகிற அல்லது வன்முறையைப் பயன்படுத்துகிற ஒருவர், இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்குச் சிறைத்தண்டனையோ அஅல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

11.3 நான்காவது குற்றச்சாட்டை பொறுத்து அ.சா.2 சாட்சி 161 வாக்குமூலத்தில், அ.சா.1ன் கையை பிடித்து திருக்கி கீழே தள்ளிவிட்டதால் இடது முழங்கையில் ஊமைக்காயம் ஏற்பட்டதால் நான் எதுக்கு இப்படி என் அம்மாவை அடிக்கிறீங்க என்று கேட்டதற்கு 2–வது எதிரி செருப்பைக் கழட்டி என்னை அடித்து கீழே தள்ளிவிட்டதில் வலது பக்க நெற்றியில் சிராய்ப்பு காயமும், தலையின் வலது புறம் வீக்கக்காயமும் ஏற்பட்டது எனக் கூறியுள்ளார். ஆனால், அதன் தொடர்ச்சியாக நீதிமன்ற அ.சா.1 முதல் விசாரணையில் "ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், தன்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் மட்டும் தன்னுடையதுதான் என்றும், அது அ.சா.ஆ–1 என்றும், புகாரில் என்ன எழுதியுள்ளது என்ற விபரம் தனக்குத் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும்" சாட்சியம் அளித்துள்ளார். அதேபோன்று, சம்பவ சாட்சியான அ.சா.2 தனது நீதிமன்ற முதல் விசாரணை சாட்சியத்தில், "ஆஜர் எதிரிகளை தனக்குத் தெரியும் என்றும், வழக்குபற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும்" சாட்சியம் அளித்துள்ளார்கள். சாட்சியம் அளித்துள்ளார். மேலும், வன்முறை அல்லது தாக்குதலை

அ.சா.2ன் மீது 2–வது எதிரி ஏற்படுத்தி, அதன்மூலம் அ.சா.2ன் மானத்திற்கு பங்கம் ஏற்படுத்தும் விதமாக 2–வது எதிரி நடந்துகொண்டார் என்று அ.சா.1, அ.சா.2 சாட்சிகள் சாட்சியம் அளிக்கவில்லை. அவர்களை குறுக்கு விசாரணை செய்தபோதும் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியமளிக்கவில்லை. மேற்படி இந்திய சாட்சிய சட்டத்தின் படியும், மாண்புமிகு உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற முன் தீர்ப்புகளின் அடிப்படையில் சாட்சியம் என்பது முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை இணைந்தது தான் சாட்சியம் என்ற சட்ட கோட்பாட்டின் அடிப்படையில் அ.சா.1, அ.சா.2–ன் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை சாட்சியத்தை இந்நீதிமன்றம் பரிசீலனை எடுத்துக்கொண்டு அ.சா.1, அ.சா.2–ன் சாட்சியம் நம்பும்படியும், சாட்சியத்திற்கு ஒத்துரைக்கும் விதமாக இல்லை (Collaboration) என இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

11.4. ஆதலால் 2–வது எதிரி அ.சா.2 திரிஷா என்பவரை செருப்பைக் கழட்டி என்னை அடித்து கீழே தள்ளிவிட்டதில் வலது பக்க நெற்றியில் சிராய்ப்பு காயமும், தலையின் வலது புறம் வீக்கக்காயமும் ஏற்படுத்தினார் என்பதை அரசு தரப்பு அ.சா.2 திரிஷாவிற்கு ஏற்பட்ட காயத்தை மருத்துவ சாட்சியோடு ஒத்துரைப்பு செய்துள்ளனர். ஆனால் 2–வது எதிரிதான் அ.சா.2ஐ செருப்பால் அடித்தார் என்பதையும், அதனால் தங்களுக்கு அவமானம் ஏற்பட்டது என்று குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. மேலும், அரசு தரப்பில் செருப்பை எதிரி மூலம் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றப்படவில்லை. அ.சா.1, அ.சா.2 ஆகியோர்களால் செருப்பை அடையாளம் காட்டப்படவில்லை. மேற்படி அரசு தரப்பு நிரூபணம் செய்யாதது அரசு தரப்பை சந்தேகிக்கும் வகையில் உள்ளது. எனவே, மேற்படி அ.சா.1 மற்றும் அ.சா.2ன் சாட்சியத்தின் மூலம் 2–வது எதிரி மீதான இ.த.ச. பிரிவு 355–ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பினரால் பிற சாட்சிகளோடு ஒத்துரைக்கும்விதமாக சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதி, 2–வது எதிரியை இ.த.ச. பிரிவு 355 குற்றச்சாட்டு மெய்ப்பிக்கப்படாததால் 2–வது எதிரி குற்றவாளி இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

12. இந்த வழக்கில் எதிரி மீது ஐந்தாவது குற்றச்சாட்டு என்பது எதிரிகள் மூவரும் சேர்ந்து புகார்தாரர் மற்றும் சாட்சி–2 ஆகியோர்களைப் பார்த்து "சிறுக்கிபுள்ளைகளா இனியும் பாத்ரூமை எடுக்க சொன்னீங்கன்னா உங்களை கொன்னுபுடுவோம்"என்று கொலை மிரட்டல் குற்றத்திற்காக எதிரி மீது இ.த.ச. பிரிவு 506(1) (2 எண்ணிக்கைகள்)–ன் கீழ் தண்டிப்பதற்குரிய குற்றம் புரிந்தார்களா? என்பதை அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து பின்வருமாறு பரிசீலனை செய்யலாம்.

12.1. மேற்படி ஐந்தாவது குற்றச்சாட்டை இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 503, 506 உட்கூறுகள் அரசு தரப்பால் சந்தேகத்திற்கு அப்பால் நிரூபணம் செய்ய வேண்டும். அதன் ஊட்கூறுகள் பின்வருமாறு:–

12.2. **இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 503–மிரட்டல் குற்றம்(Criminal intimidation): உட்கூறுகள் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது** "ஒருவருடைய உடலுக்கு பெயருக்கு அல்லது சொத்துக்கு அல்லது அவர் அக்கறை கொண்டுள்ள ஒருவரின் உடலுக்கு அல்லது பெயருக்குக் கேடு இழைப்பதாக அவருக்குப் பீதி விளைவிக்கும் உட்கருத்துடன், அல்லது அத்தகைய மிரட்டல் நிறைவேற்றப்படுவதைத் தவிர்க்கும்பொருட்டு, அவர் சட்டபடி செய்யக் கட்டுப்பட்டிராத செய்கை எதனையும் செய்யாது விடுவதை, விளைவிக்க அச்சுறுத்துகிற ஒருவர் மிரட்டல் குற்றம் செய்தவராவார்.

**விளக்கம்:** அச்சுறுத்தப்பட்டவர் அக்கறை கொண்டுள்ள இறந்த ஒருவரின் பெயருக்குக்கேடு இழைப்பதான அச்சுறுத்தலும் இந்தப் பிரிவில் அடங்கும்".

12.3 **இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 506 :–மிரட்டலுக்குத் தண்டனை**

**பிரிவு 506(i) :–** மிரட்டல் குற்றம் செய்கிற ஒருவர் இரண்டாண்டுகள் வரை சிறைத்தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**பிரிவு 506(ii) :** மிரட்டல் குற்றம் செய்கிற ஒருவர் ஏழாண்டுகள் வரை சிறைத்தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

12.4 ஐந்தாவது குற்றச்சாட்டை பொறுத்து அ.சா.1 ஆகிய சாட்சி 161 வாக்குமூலத்தில். எதிரிகள் அனைவரும் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்களைப்

பார்த்து " சிறுக்கிபுள்ளைகளா இனியும் பாத்ரூமை எடுக்க சொன்னீங்கன்னா உங்களை கொன்னுபுடுவோம்" என்று கொலை மிரட்டல் விடுத்தார்கள் என கூறியுள்ளார். அதன் தொடர்ச்சியாக நீதிமன்ற முதல் விசாரணையில், அ.சா.1 "ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், தன்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் மட்டும் தன்னுடையதுதான் என்றும், அது அ.சா.ஆ–1 என்றும், புகாரில் என்ன எழுதியுள்ளது என்ற விபரம் தனக்குத் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும்" சாட்சியம் அளித்துள்ளார். அதேபோன்று, சம்பவ சாட்சியான அ.சா.2 தனது நீதிமன்ற முதல் விசாரணை சாட்சியத்தில், "ஆஜர் எதிரிகளை தனக்குத் தெரியும் என்றும், வழக்குபற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும்" சாட்சியம் அளித்துள்ளார்கள். மேற்படி முதல் விசாரணை சாட்சியமானது முன்பு சொன்ன 161 வாக்குமூலம், ஆகியவற்றில் 1 முதல் 3 எதிரிகள் அ.சா.1, அ.சா.2 ஆகியோர்களைப் பார்த்து கொலை மிரட்டல் விடுத்ததாக குறிப்பிட்டு சொல்லிவிட்டு நீதிமன்ற முதல் விசாரணை சாட்சியத்தில் முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார். **மேற்படி இந்திய சாட்சிய சட்டத்தின் படியும், மாண்புமிகு உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற முன் தீர்ப்புகளின் அடிப்படையில் சாட்சியம் என்பது முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை இணைந்தது தான் சாட்சியம் என்ற சட்ட கோட்பாட்டின் அடிப்படையில்** அ.சா.1, அ.சா.2–ன் சாட்சியத்தை இந்நீதிமன்றம் பரிசீலனை எடுத்துக்கொண்டு அ.சா.1, அ.சா.2–ன் சாட்சியம் அரசு தரப்பை ஒத்துரைக்கும் விதமாக இல்லை (Collaboration) எனவும், அ.சா.1, அ.சா.2–யை எதிரிகள் கொலைமிரட்டல் விடுத்ததால் அ.சா.1, அ.சா.2 ஆகியோர்களுக்கு உயிர் பயமோ, அச்சுறுத்தலோ எதுவும் ஏற்பட்டதாக அ.சா.1 மற்றும் அ.சா.2 இந்நீதிமன்றம் முதல் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை. மேற்படி இ.த.ச. பிரிவு 506(1) கீழ் 1 முதல் 3 எதிரிகள் தண்டிக்கப்பட வேண்டும் எனில் எதிரிகளின் செயலால் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்களுக்கு உயிர் பயம், அச்சுறுத்தல் ஏற்பட்டு என்பதை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பால் நிரூபணம் செய்யவேண்டும். ஆனால் இந்த வழக்கில் அரசு தரப்பு மேற்படி அ.சா.1, அ.சா.2–ன் சாட்சியத்தின் மூலம் 1 முதல் 3 எதிரிகள் மீதான இ.த.ச. பிரிவு 506(1) (2 எண்ணிக்கைகள்)–ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பினரால்

சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதி, 1 முதல் 3 எதிரிகளை இ.த.ச. பிரிவு 506(1) (2 எண்ணிக்கைகள்)–ன் கீழான குற்றச்சாட்டு மெய்ப்பிக்கப்படாததால் 1 முதல் 3 எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

13. இந்த வழக்கில் 1 முதல் 3 எதிரிகள் மீது ஆறாவது குற்றச்சாட்டு என்பது 1 முதல் 3 எதிரிகள் 1–வது சாட்சி கவிதா என்பவரை பெண் என்றும் பாராமல் பொது இடத்தில் வைத்து அசிங்கமாக பேசி, அடித்து காயப்படுத்தி, கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காக 1 முதல் 3 எதிரிகள் மீது பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் தண்டிப்பதற்குரிய குற்றம் புரிந்தாரா? என்பதை அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து பின்வருமாறு பரிசீலனை செய்யலாம்.

13.1 மேற்படி ஆறாவது குற்றச்சாட்டை **<u>பிரிவு 4 பெண்களுக்குத் தொல்லை கொடுத்தலுக்கான தண்டனையின் உட்கூறுகள் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது</u>**

கல்வி நிலைய வளாகம், கோயில் அல்லது பிற வழிப்பாட்டுத்தலம், பேருந்து நிறுத்தம், சாலை, இரயில் நிலையம், திரையரங்கம், பூங்கா, கடற்கரை, திருவிழா நடைபெறும் இடம், பொதுமக்கள் பயன்படுத்தும் வாகனம் அல்லது கலம் அல்லது வேறு இடம் எதிலும் பெண்களுக்குத் தொல்லை கொடுக்கிற, தொல்லை கொடுப்பவருக்கு உடந்தையாக இருக்கின்ற எவரொருவரும் (முதல் குற்றச்சாட்டின் பேரில், ஐந்து ஆண்டுகள் வரை நீட்டிக்கக்கூடிய சிறைத்தண்டனையும், ஒரு இலட்சம் ரூபாய்க்குக் குறையாத அபராதமும் விதிக்கப்பட வேண்டும். மேலும், இரண்டாவது அல்லது அடுத்தடுத்த குற்றச்சாட்டின் பேரில் ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாத ஆனால் பத்து ஆண்டுகள் வரை நீட்டிக்கக்கூடிய சிறைத்தண்டனையும் பத்து இலட்சம் ரூபாய்க்குக்குறையாகத அபராதமும் விதிக்கப்பட வேண்டும்)

**<u>பிரிவு 2(அ) சொற்பொருள் விளக்கங்கள் :</u>**

**<u>அ) "தொந்தரவு"</u>** என்பதன் பொருள், ஆண் ஒருவரால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு அநாகரிகமான நடத்தை, செயல் அல்லது செயல்முறை (உடல், வாய்மொழி, வாய்மொழியல்லாத, டிஜிட்டல், மின்னணு அல்லது வேறு எந்த வழியிலானதாக இருந்தாலும்) அது அச்சுறுத்தல், பயம், அவமானம் அல்லது சங்கடத்தை ஏற்படுத்தினால் அல்லது ஏற்படுத்தக்கூடியதாக இருந்தால் ; அதில் மிரட்டல், அவதூறு, காயப்படுத்துதல்,

இடையூறு செய்தல், தாக்குதல் அல்லது பலவந்தம் பயன்படுத்துதல் ஆகியவையும் அடங்கும்)

13.2. ஆறாவது குற்றச்சாட்டை பொறுத்து அ.சா.1 ஆகிய சாட்சிகள் 161 வாக்குமூலத்தில். எதிரி அ.சா.1–யை பார்த்து "ஏ தேவிடியா கூதி மகள்களா" என்று அசிங்கமாக பேசி, 1–வது எதிரி கையை பிடித்து திருக்கி, 2, 3 எதிரிகள் அ.சா.1 ஐ கீழே தள்ளிவிட்டு, சாதாரண காயம் ஏற்படுத்தி, " சிறுக்கிபுள்ளைகளா இனியும் பாத்ரூமை எடுக்க சொன்னீங்கன்னா உங்களை கொன்னுபுடுவோம்" என்றும் கூறியுள்ளார்கள். அதன் தொடர்ச்சியாக நீதிமன்ற முதல் விசாரணையில், அ.சா.1, அ.சா.2 வரையிலானவர்கள் வழக்கு பற்றி எதுவும் தெரியாது என சாட்சியமளித்து அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்து பிறழ் சாட்சிகளாக மாறியுள்ளார்கள். மேற்படி முதல் விசாரணை சாட்சியமானது முன்பு சொன்ன 161 வாக்குமூலம், ஆகியவற்றில் 1 முதல் 3 எதிரிகள் அ.சா.1 ன் பெண்மைக்கு பங்கம் விளைவித்ததாக சம்பவ சாட்சியான அ.சா.2 குறிப்பிட்டு சொல்லிவிட்டு நீதிமன்ற முதல் விசாரணை சாட்சியத்தில் தான் நேரடியாக சம்பவத்தை பார்க்காதது போன்று முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார். **மேற்படி இந்திய சாட்சிய சட்டத்தின் படியும், மாண்புமிகு உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற முன் தீர்ப்புகளின் அடிப்படையில் சாட்சியம் என்பது முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை இணைந்தது தான் சாட்சியம் என்ற சட்ட கோட்பாட்டின் அடிப்படையில்** அ.சா.1, அ.சா.2–ன் சாட்சியத்தை இந்நீதிமன்றம் பிரிசீலனை எடுத்துக்கொண்டு அ.சா.1, அ.சா.2–ன் சாட்சியம் அரசு தரப்பை ஒத்துரைக்கும் விதமாக இல்லை (Collaboration) எனவும், 1 முதல் 3 எதிரிகள் அ.சா.1–ன் பெண்மைக்கு பங்கம் விளைவித்ததாக அ.சா.1, அ.சா.2 ஆகிய சாட்சிகள் இந்நீதிமன்றம் முதல் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை. மேற்படி பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் 1 முதல் 3 எதிரிகள் தண்டிக்கப்பட வேண்டும் எனில் எதிரிகளின் நடத்தை, செயல் ஆகியவற்றால் அ.சா.1–ன் பெண்மைக்கு பங்கம் விளைவித்தல் ஏற்பட்டது என்பதை அரசு தரப்பில் சந்தேகித்திற்கு அப்பால் நிருபனம் செய்யவேண்டும். ஆனால் இந்த வழக்கில் அரசு தரப்பு மேற்படி அ.சா.1, அ.சா.2 ஆகியோர்களின் சாட்சியத்தின் மூலம் 1 முதல் 3 எதிரிகள் மீதான பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பினரால்

சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதி, 1 முதல் 3 எதிரிகளை பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழான குற்றச்சாட்டு மெய்ப்பிக்கப்படாததால் 1 முதல் 3 எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

14. மேலும், அ.சா.3 ஆன காவல்துறை அதிகாரியின் சாட்சியத்தை பரிசீலிக்கையில் அவர் தனது சாட்சியத்தில், இறுதியறிக்கையில் சொல்லப்பட்டுள்ள அரசு வழக்கிற்கு ஆதரமாக வழக்கு கோப்புகளின் அடிப்படையில் சாட்சியமளித்துள்ளார். அ.சா.3 ன் சாட்சியத்தின் மூலம், இவ்வழக்கின் புகார் மனு சம்மந்தமாக பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை குறித்தும், விசாரணை அதிகாரிகள் சம்பவ இடம் சென்று தயார் செய்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் குறித்தும் மட்டுமே தெரிய வருகிறது. இந்நிலையில் இவ்வழக்கில் புகார் மனு கொடுத்ததாக அரசு தரப்பில் சுட்டிக்காட்டப்படும் அ.சா.1, சம்பவத்தால் பாதிக்கப்பட்ட மற்றொரு சாட்சியாக அரசு தரப்பில் சுட்டிக்காட்டப்படும் அ.சா.2 ஆகியோர்கள் அரசு தரப்பு வழக்கிற்கு விரோதமாக பிறழ் சாட்சியம் அளித்துள்ள நிலையில், வழக்கு கோப்புகளை மட்டுமே பார்வையிட்டு அதனடிப்படையில் சாட்சியம் அளித்துள்ள அ.சா.3–ன் சாட்சியத்தை மட்டும் வைத்துக்கொண்டு, 1 முதல் 3 எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுவிட்டதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்க இயலாது என்றும் இந்நீதிமன்றம் கருதி 1, 3 எதிரிகள் இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 352, 506(1) (2 எண்ணிக்கைகள்) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழும், 2–வது எதிரி இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 352, 355, 506(1) (2 எண்ணிக்கைகள்) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழும், குற்றவாளிகள் இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

15) <u>எதிரிகள் குற்றவாளி எனில், எதிரிகளுக்கு வழங்கப்பட வேண்டிய தண்டனை என்ன?</u>

15.1 மேற்படி அரசு தரப்பில் 1, 3 எதிரிகள் மீது சுமத்தப்பட்ட இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 352, 506(1) (2 எண்ணிக்கைகள்) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள்

வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழும், 2-வது எதிரி மீது சுமத்தப்பட்ட இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 352, 355, 506(1) (2 எண்ணிக்கைகள்) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழும், கீழான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பால் நிருபணம் செய்யவில்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கப்பட்டுள்ளதால் எதிரிகளுக்கு எந்தவித தண்டனையும் வழங்க இயலாது என இந்நீதிமன்றம் தீர்மாணிக்கிறது.

16. இறுதியாக, 1, 3 எதிரிகள் இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 352, 506(1) (2 எண்ணிக்கைகள்) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழும், 2-வது எதிரி இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 352, 355, 506(1) (2 எண்ணிக்கைகள்) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழான குற்றச்சாட்டுக்கள் கீழ் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து 1 முதல் 3 எதிரிகளை கு.வி.மு.ச.பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. 1 முதல் 3 எதிரிகள் ஏற்கனேவே இவ்வழக்கு சம்மந்தமாக இந்நீதிமன்றத்தில் வழங்கியிருந்த பிணை முறிவு பத்திரத்தை மேல்முறையீடு காலம் முடிந்த பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

17. இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படாததால் அது குறித்து உத்தரவு ஏதுமில்லை.

என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழை திருத்தம் மேற்கொள்ளப்பட்டு 2026-ம் ஆண்டு ஜுன் திங்கள் கிழமை, 15-ம் நாளான இன்று என்னால் இந்தத் தீர்ப்புரை அவையறிப்பகரப்பட்டது.

(ஒம்/-எம்.மாரி)
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
சங்கரன்கோவில்.

**<u>அரசுத் தரப்பு சாட்சிகள்:</u>**

1. அ.சா.1 திருமதி. கவிதா ( நிகழ்நிலை புகார்தாரர்)
2. அ.சா.2 திருமதி. திரிஷா (சம்பவ சாட்சி)
3. அ.சா.4 திரு.சசிக்குமார் (தலைமைக்காவலர், கரிவலம்வந்தநல்லூர் காவல் நிலையம்)

**<u>அரசுத் தரப்பு சான்றாவணங்கள்:</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 25.06.2021 | புகார் மனுவில் உள்ள அ.சா.1 ன் கையெழுத்து |
| அ.சா.ஆ.2 | 25.06.2021 | புகார் மனு |
| அ.சா.ஆ.3 | 01.07.2021 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 01.07.2021 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.5 | 01.07.2021 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 | 24.06.2021 | அ.சா.1 ன் காயச்சான்று |

**<u>அரசு தரப்பு சான்று பொருட்கள் :</u>** இல்லை

**<u>எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> :** இல்லை.

(ஒம்/–எம்.மாரி)
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
சங்கரன்கோவில்.